No. of Printed Pages : 12

# 5058

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

குறிப்பு : **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

**Note :** Answer **all** the questions.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

Choose the correct answer for the following :

1. கிடைப்பருமை இலக்கணத்தின் ஆசிரியர்.

(அ) ஆடம்ஸ்மித் (ஆ) சாமுவேல்சன்

(இ) ஆல்பிரட் மார்ஷல் (ஈ) இலயனல் ராபின்ஸ்

The author of scarcity definition is :

(a) Adam Smith (b) Samuelson

(c) Alfred Marshall (d) Lionel Robbins

[ திருப்புக / Turn over

2. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படைச் சக்தியாக விளங்குவது.

(அ) திட்டமிடல் (ஆ) தொழில் நுட்பம்

(இ) அரசு (ஈ) இலாபம்

The basic force that drives the capitalist economy is :

(a) Planning (b) Technology

(c) Government (d) Profit-motive

3. ஒற்றைப் பண்ட நுகர்வு எதை உணர்த்தும் ?

(அ) உற்பத்தி வாய்ப்பு வளைகோடு

(ஆ) சம-இறுதி நிலைப் பயன்பாட்டு விதி

(இ) அளிப்பு விதி

(ஈ) குறைந்துச் செல் இறுதிநிலை பயன்பாட்டுவிதி

Single commodity consumption mode is :

(a) Production Possibility Curve

(b) Law of Equi-Marginal Utility

(c) Law of Supply

(d) Law of Diminishing Marginal Utility

4. அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள் :

(அ) உற்பத்தி தொழில் நுட்பம் (ஆ) உற்பத்தி காரணிகளின் விலைகள்

(இ) வரிகளும் சலுகைகளும் (ஈ) மேற்கூறிய அனைத்தும்.

Factors determining supply are :

(a) Production technology (b) Prices of factors of production

(c) Taxes and subsidies (d) All the above

5. விலையில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப தேவையின் மாற்றத்தை தோற்றுவிக்கும் அளவு :

(அ) வருமான தேவை நெகிழ்ச்சி (ஆ) குறுக்கு தேவை நெகிழ்ச்சி

(இ) விலைத் தேவை நெகிழ்ச்சி (ஈ) மேற்கூறிய அனைத்தும்

The degree of response of demand to a change in price is :

(a) Income elasticity of demand (b) Cross elasticity of demand

(c) Price elasticity of demand (d) All the above

6. நீண்ட காலத்தில் :

(அ) எல்லா காரணிகளும் மாறும்

(ஆ) மாறும் காரணி மட்டும் மாறும்

(இ) மாறா காரணி மட்டும் மாறும்

(ஈ) மாறும் மற்றும் மாறா காரணிகள் நிலையாக இருக்கும்

In the long period :

(a) All factors change

(b) Only variable factor changes

(c) Only fixed factor changes

(d) Variable and fixed factors remain constant

7. நிலத்தின் ஆரம்ப அளிப்பு விலை :

(அ) பூஜ்யம் (ஆ) ஒன்றுக்கும் அதிகமானது

(இ) ஒன்றுக்கும் குறைவானது (ஈ) ஒன்றுக்கு சமமானது

The initial supply price of land is :

(a) Zero (b) Greater than one

(c) Less than one (d) Equal to one

8. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும் போது கிடைக்கும் :

(அ) $\frac{TC}{Q}$ (ஆ) $\frac{TFC}{Q}$ (இ) $\frac{TVC}{Q}$ (ஈ) எதுவும் இல்லை

Average fixed cost is obtained by dividing :

(a) $\frac{TC}{Q}$ (b) $\frac{TFC}{Q}$ (c) $\frac{TVC}{Q}$ (d) None

9. எந்த நிலையில் ஒரு நிறுவனம் சமநிலை பெறும் :

(அ) MC = MR (ஆ) MC = AC (இ) MR = AR (ஈ) MR = AC

A firm can achieve equilibrium when its :

(a) MC = MR (b) MC = AC (c) MR = AR (d) MR = AC

10. நீர்மை விருப்ப கோட்பாட்டின் ஆசிரியர் :

(அ) J.M. கீன்ஸ் (ஆ) மார்ஷல்

(இ) சாமுவேல்சன் (ஈ) நைட்

The author of liquidity preference theory is :

(a) J.M. Keynes (b) Marshall

(c) Samuelson (d) Knight

11. இறுதி நிலை நுகர்வு நாட்டம் :

(அ) $\frac{\Delta S}{\Delta Y}$ (ஆ) $\frac{C}{Y}$ (இ) $\frac{\Delta P}{\Delta Q}$ (ஈ) $\frac{\Delta C}{\Delta Y}$

The Marginal propensity to consume :

(a) $\frac{\Delta S}{\Delta Y}$ (b) $\frac{C}{Y}$ (c) $\frac{\Delta P}{\Delta Q}$ (d) $\frac{\Delta C}{\Delta Y}$

12. பேரியல் பொருளாதாரத்தின் மையப்பிரச்சனை :

(அ) வருமானமும் வேலை வாய்ப்பும்

(ஆ) விலையும் வெளியீடும்

(இ) வட்டியும் பணமும்

(ஈ) ஏதுமில்லை

The Central problem in Macro Economics is :

(a) Income and employment

(b) Price and output

(c) Interest and money

(d) None

13. பணவீக்கத்தின் போது என்ன நிகழும் ?

(அ) வியாபாரிகள் இலாபம் ஈட்டுவர்

(ஆ) ஊதியம் ஈட்டுபவர் இலாபம் பெறுவர்

(இ) மாதச் சம்பளம் பெறுவர் இலாபம் பெறுவர்.

(ஈ) வாடகைக்கு விடுபவர் இலாபம் பெறுவர்

During inflation :

(a) Businessmen gain

(b) Wage earners gain

(c) Salaried people gain

(d) Rentiers gain

14. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது :

(அ) உரிமம் (ஆ) வெகுமதி மற்றும் மானியம்

(இ) கடன் (ஈ) வரி

The compulsory charge levied by the government is :

(a) Licence (b) Gifts and Grants

(c) Loan (d) Tax

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 12x1=12

Fill in the blanks with suitable answers.

15. உற்பத்தி எனப்படுவது ________ உருவாக்குவதாகும்.

Strictly speaking, production refers to the creation of ________ .

16. கலப்பு பொருளாதாரத்தில், பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது ________ ஆகும்.

Under mixed economy, the economic control is exercised by ________ and ________ sectors.

17. சமநோக்கு வளைகோடு மையத்தை நோக்கி ________ காணப்படும்.

An indifference curve is ________ to the origin.

18. தனிநபர் நுகர்வு அட்டவணைகளை ஒன்று சேர்க்கும்போது ________ ஆகும்.

Adding up of individual consumers schedule is ________ .

19. அங்காடிக் காலத்தில் அளிப்புக்கோடு ________ .

The supply curve in the market period is a ________ line.

20. __________ என்பது வேறு பல பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சிகளால் உருவாக்கப்பட்டது.

__________ is man-made physical goods used to produce other goods.

21. இறுதிநிலை செலவு வளைகோடானது __________ வடிவத்தில் இருக்கும்.

The Marginal cost curve is __________ shaped.

22. நிறுவனத்தில் சராசரி வருவாயானது, சராசரி செலவை விட அதிகமாக இருப்பின் அந்நிறுவனம் __________ ஈட்டும்.

When the average revenue of the firm is greater than its average cost, the firm is earning __________ .

23. இறுதி நிலை உற்பத்தித்திறன் கோட்பாடு __________ போட்டி சந்தையின் எடுகோளை அடிப்படையாகக் கொண்டது.

Marginal productivity theory is based on the assumption of __________ competition.

24. __________ என்பது மக்களின் கையிருப்பு (ரொக்கம்) பணம் ஆகும்.

__________ refers to the cash holdings of the people.

25. பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குவது __________ என அழைக்கப்படுகிறது.

The direct exchange of goods for goods is known as __________ .

26. __________ என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய்.

__________ means different sources of government income.

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக. 12x1=12

| | | | |
|---|---|---|---|
| 27. | செல்வம் | (அ) | வைரம் |
| 28. | சந்தை சக்திகள் | (ஆ) | விளம்பரங்கள் |
| 29. | விருப்பங்கள் | (இ) | மார்ஷல் |
| 30. | இரு புள்ளிகளுக்கிடையே உள்ள பிரிவு | (ஈ) | காப்-டக்லஸ் |
| 31. | தள்ளுபடி விலை | (உ) | வரி விதிப்பு வீதம் குறையும் |
| 32. | உற்பத்தி சார்பு | (ஊ) | $\frac{1}{1-MPC}$ |
| 33. | மொத்த செலவு (TC) | (எ) | இருப்பு |
| 34. | தென் ஆப்பிரிக்கா | (ஏ) | வளைவு |
| 35. | காத்திருத்தல் வட்டிக் கோட்பாடு | (ஐ) | குறைந்த வட்டி வீதம் |
| 36. | K | (ஒ) | அளிப்பு, தேவை மற்றும் விலை |
| 37. | மலிவுப் பணக் கொள்கை | (ஓ) | TFC+TVC |
| 38. | தேய்வு வீத வரி | (ஔ) | ஆண்டு இருப்பை விற்றுத் தீர்க்க |

Match the following :

| | | | |
|---|---|---|---|
| 27. | Wealth | (a) | Diamond |
| 28. | Market forces | (b) | Advertisements |
| 29. | Wants | (c) | Marshall |
| 30. | Segment between two points | (d) | Cobb-Douglas |
| 31. | Price Discount | (e) | Tax rate decreases |
| 32. | Production function | (f) | $\frac{1}{1-MPC}$ |
| 33. | TC | (g) | Stock |
| 34. | South Africa | (h) | Arc |
| 35. | Waiting theory of Interest | (i) | Low rate of interest |
| 36. | K | (j) | Supply, demand and price |
| 37. | Cheap money policy | (k) | TFC+TVC |
| 38. | Regressive tax | (l) | Annual Stock Clearance |

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக. 12x1=12
Answer each of the following questions in a word or **two** :

39. பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன?
What is the other name for Economics ?

40. முதலாளித்துவத்தில் உற்பத்தி ஏன் அதிகரிக்கப்படுகிறது?
What is the basic force that drives a Capitalist economy ?

41. பயன்பாட்டை வரையறு.
Define Utility.

42. பொருளாதார கோட்பாட்டின் அடிப்படை எடுக்கோள்கள் யாவை?
What is the basic assumption of economic theory ?

43. நிலையான முதலீட்டிற்கு ஒரு உதாரணம் கொடு?
Give an example for fixed input.

44. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறுக.
State the Cobb-Douglas production function.

45. உறைவடிவ வளைக்கோடு என்பது என்ன?
What is an envelope curve ?

46. பொது பயன்பாடுகளை மேற்கொள்பவர் யார்?
Who undertakes the public utilities ?

47. இலாப -வாரக் கோட்பாட்டின் ஆசிரியர் யார்?
Who is the author of the rent theory of profits ?

48. J.B சேயின் சந்தை விதியைக் கூறுக.
State J.B. Say's Law of Market.

49. நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தும் வங்கி எது?
Name the bank which controls money supply in a country.

50. விகிதாச்சார வரி விதிப்பு முறை என்றால் என்ன?
What is the meaning of proportional tax ?

## பகுதி - ஆ / PART - B

V. குறிப்பு : (i) எவையேனும் **பத்து வினாக்களுக்கு** விடையளிக்கவும். **10x3=30**

(ii) ஒவ்வொரு விடையும் **நான்கு** அல்லது **ஐந்து** வரிகளில் அமைந்திட வேண்டும்.

Note : (i) Answer **any ten** of the following questions.

(ii) Answer for each question should be about **four or five** lines.

51. பொருளாதாரத்தின் முக்கிய பிரிவுகள் என்ன?
What are the main divisions of economics ?

52. எந்த ஒரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை?
What are the basic issues of any society ?

53. வாய்ப்புச் செலவு என்றால் என்ன?
What is opportunity cost ?

54. விருப்பங்களுக்கான காரணங்கள் யாவை?
What are the causes for wants ?

55. தேவைக் கோடானது ஏன் கீழ்நோக்கி வருகிறது?
Why does the demand curve slope downwards ?

56. அளிப்புக்கோடு இடம் பெயர்தலுக்கான காரணிகள் யாவை?
What are the determinants of shift in supply ?

57. சம நிலை விலை என்றால் என்ன?
What is equilibrium price ?

58. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக.
Name the types of utility.

59. வேலைப்பகுப்பு முறை என்பதன் பொருள் யாது?
What is meant by division of Labour ?

60. MC மற்றும் AC -க்கும் இடையேயுள்ள உறவுகளைக் கூறுக.
Mention the relationship between MC and AC.

61. இறுதி நிலைச் செலவு என்றால் என்ன?
Define Marginal Cost.

62. இறுதிநிலை உற்பத்தித் திறன் கோட்பாட்டின் எடுகோள்கள் யாவை?
What are the assumptions of Marginal Productivity theory of distribution ?

63. 'சே'யின் சந்தை விதியின் எடுக்கோள்களை கூறுக.
What are the assumptions of Say's law of market ?

64. பணக்கொள்கையின் இலக்கணம் கூறுக.
Define Monetary Policy.

65. பொதுநிதி - வரையறு.
Define Public Finance.

## பகுதி - இ / PART - C

VI. குறிப்பு : (i) எவையேனும் **ஆறு வினாக்களுக்கு** விடையளிக்கவும். **6x10=60**
(ii) ஒவ்வொரு விடையும் **ஒரு பக்க அளவில்** அமைந்திட வேண்டும்.
**Note :** (i) Answer **any six** of the following questions.
(ii) Answer for each question should be about **a page.**

66. சமதர்ம பொருளாதாரத்தின் நன்மைகளை விளக்குக.
What are the merits of Socialist economy ?

67. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?
How is the equilibrium price determined in the market period ?

68. மூலதனத்தின் பண்புகளை வரிசைப்படுத்தி எழுதுக.
Describe the characteristics of capital.

69. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகளை எழுதுக.
Explain the relationship between AR and MR curve.

70. இறுதிநிலை செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.
Explain the Marginal Cost with suitable illustration.

71. நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்கவும்.
Explain the features of perfect competition.

72. கீன்சு கோட்பாட்டின் சாராம்சத்தை படம் வரைந்து விளக்குக.
Draw the flow chart to depict the essence of Keynes theory.

73. நுகர்வைத் தீர்மானிக்கும் வருமானம் தவிர பிறக் காரணிகளை கூறுக.
What are the determinants of consumption other than income ?

74. ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பதை விளக்குக. சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்.
Define Budget. Explain the balanced and unbalanced budget.

75. 'நேர்முகவரி' மற்றும் 'மறைமுகவரி'யை வேறுப்படுத்திக் காட்டுக.
Differentiate between the direct and indirect taxes.

## பகுதி - ஈ / PART - D

VII. குறிப்பு : (i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளி. 3x20=60

(ii) ஒவ்வொரு விடையும் **மூன்று பக்க அளவில்** அமைந்திட வேண்டும்.

**Note :** (i) Answer **any three** of the following questions.

(ii) Answer for each question should be about **three pages**.

76. பொருளாதாரத்தைப் பற்றி இலயனல் ராபின்சின் இலக்கணத்தை ஆராய்க.
Examine Lionel Robbins definition of economics.

77. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை?
Explain the characteristics of human wants.

78. விலைத் தேவை நெகிழ்ச்சியினை அளவிடும் முறைகளை விவரமாக எழுதுக.

Explain the methods of measurement of price elasticity of demand in detail.

79. குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

How is the price and output determined in the short run under perfect competition ?

80. கடன் நிதி வட்டிக் கோட்பாட்டினை விவரி.

Describe Loanable funds theory of interest.

81. பணத்தின் பணிகளை விவரிக்கவும்.

Describe the functions of money.

-oOo-